2009 பிப்ரவரி 23]

(இ) வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமிக்க பொதுமக்கள் உண்ணாவிரதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் உடனடியாக மருத்துவர்களை நியமனம் செய்ய வேண்டி கடந்த ஒருவார காலமாகப் பொது மக்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வருவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் ஆகியோர் விதி எண் 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதைத் தகவல் கோரல் என்ற முறையில் நான் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து ஒருவர் மட்டும் சுருக்கமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் மருத்துவர் இல்லாத குறையின் காரணமாக அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற, சுற்றுப்புறங்களிலே இருக்கிற ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாம்பு கடித்தாலோ, விஷம் குடித்து இறந்தாலோ, வாந்தி பேதி வருகிறபோதோ உடனுக்குடன் மருத்துவம் செய்வதற்கு போதிய மருத்துவர்கள் இல்லை என்ற குறையைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணைப்படி, தொடர்ந்து 10 நாட்கள் அந்தப் பகுதியிலே, ஊராட்சி மன்றத்தினுடைய பகுதிகளிலே உண்ணாவிரதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-05

மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதாக அரசிடமிருந்து தகவல்கள் வந்தாலும், ஒரே ஒரு மருத்துவர் மட்டும்தான் வேதாரண்யத்திற்கு வந்து பணியாற்றுவதாகத் தகவல் வந்துகொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் இதுபோன்ற அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் 50 கி.மீ. தூரம் உள்ள மாவட்டத் தலைநகரமாக இருக்கிற நாகப்பட்டினத்திற்கு எடுத்துச் செல்வதற்குள், பாதிக்கப்பட்டவருக்கு உயிர் இழப்பு ஏற்படுகிற நிலை உருவாகிறது. இதை மனதிலே கொண்டு அந்தப் பகுதியிலே இருக்கிற

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2009 பிப்ரவரி 23

மக்கள் பலமுறை இந்த அரசை வலியுறுத்தியும், ஊராட்சி மன்றத்தின் சார்பாகத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சுட்டிக்காட்டியும் சரியான முறையிலே மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்படவில்லை என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இதற்குக் காரணம், இந்த அரசு, '4,156 மருத்துவர்கள் நியமித்துவிட்டோம்; ஒரு நாளைக்கு 300 பேர்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம்' என்று பட்டியலிட்டு இருக்கிறதே தவிர, மருத்துவர்கள் அங்கே சென்று பணியாற்றுகிறார்களா என்பதைக் கவனிக்காத நிலைதான் இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மருத்துவர்களை நியமிக்கிறபோது, அந்த மருத்துவர்கள் அந்தப் பகுதியில் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்களா; அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களா என்பதை நாம் கவனிக்காத காரணத்தின் அடிப்படையிலேதான் இந்த நிலைமை. வேதாரண்யத்திலே சென்று பணியாற்ற, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களின் நிலைமைகளை அறிந்துகொண்டு பணியாற்றக்கூடியவர்கள் வேண்டும் என்பதைத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். குறிப்பாக, மருத்துவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறதே தவிர, பல மருத்துவர்கள் மருத்துவமனைக்குச் சென்று, அங்குப் பணிகளை ஆற்றுவதில்லை; விடுமுறையிலே சென்று கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. ஒருநாள் மட்டும் அந்த மருத்துவமனைக்குச் சென்று பதிவு செய்துவிட்டு அதற்குப் பிறகு அந்தப் பகுதிக்குச் செல்வதே இல்லை என்ற நிலை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அதை மனதிலே கொண்டு, இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று சொன்னால், அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்களை, அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களைத் தேர்வு செய்து, யார் எங்குச் செல்லப் போகிறீர்கள் என்பதை அவர்களிடத்திலே கடிதங்கள் மூலமாகப் பெற்று, அவர்கள் அந்தப் பகுதியிலே பணியாற்றுவதற்கும், முதன்முதலில் மருத்துவர்களை நியமிக்கிறபோது ஐந்தாண்டுக் காலத்திற்கு அந்தப் பகுதியிலேயே தொடர்ந்து அவர்கள் பணியாற்றுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்கிறபோதுதான், இதுபோன்ற குறைபாடுகள் இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2009 பிப்ரவரி 23] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

அமைச்சர்கூட எடுத்த எடுப்பிலே சொல்லப்போகிறார், மருத்துவர்கள் அனைவரையும் நியமித்துவிட்டோம் என்று பேசுவார்; இப்போது நான் பேசியதற்குப் பிறகு. கடலூர் மாவட்டத்திலே பரங்கிப்பேட்டை என்ற பகுதியில், அவருடைய மாவட்டம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: அந்த மாவட்டத்திலே அரசு மருத்துவமனையில் 2 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒருவர்தான் வருகிறார். 4 பேர் அங்கே இருக்க வேண்டும். அந்தப் பகுதியிலே பார்க்கிறபோது பணியிடம் காலியாக இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்களுக்கு வருகிற பட்டியலைப் பார்க்கிறபோது 4 பேர் நியமிக்கப்பட்டுவிட்டார்கள்; அரசு மருத்துவமனையில் நிறைவாக மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்று பதில் சொல்லப்போகிறார். ஆக, அவருடைய மாவட்டத்திலேயே இந்தக் குறைபாடுகள் இருக்கிறபோது, சுற்றுப்புறங்களில் இருக்கிற, தமிழ்நாட்டிலே இதுபோன்ற குறைபாடுகளை நீக்குவதற்கு ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவின்மூலமாக எங்கெங்கே மருத்துவர்கள் பணியாற்றவில்லை; எங்கெங்கே மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதற்குப் பிறகும், அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன். வேதாரண்யத்தைப் பொறுத்தவரையில், கடைகோடி பகுதியாக, உப்பளங்கள் நிறைந்திருக்கிற அந்தப் பகுதியில், பல்வேறு காடுகள் நிறைந்திருக்கிற அந்தப் பகுதியில், இதுபோன்ற குறைபாடுகளை நீக்குவதற்கு இந்த அரசு, 10 நாட்கள் பொது மக்கள் தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டதற்குப் பிறகு நிறைவு செய்யப் போகிறதா என்பதை உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னை வம்புக்கு இழுக்கிறார் என்று நினைக்கின்றேன். வேண்டும் என்றே நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் நியமனம்

செய்ய வேண்டி, கடந்த ஒரு வார காலமாகப் பொதுமக்கள் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் என்ற போர்வையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் போராட்டத்தில் இறங்கி, ஒரு நாளைக்குக் குறைந்தது 50 பேர் அல்லது 60 பேர் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கிற காரணத்தாலே, ஏதாவது அரசியல் பண்ண வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள்.

இந்த ஆட்சியிலே, பல திட்டங்களை மக்களுக்கு நிறைவேற்றுகின்ற காரணத்தினாலே மக்கள் என்ற பெயரில் ஏதாவது பிரச்சினையை உருவாக்க வேண்டும் என்று தவறான கருத்துகளை அள்ளி வீசுகின்றார்கள். காலியாக இருந்த இடங்களை நாங்கள் நிரப்பி விட்டோம் என்று அவர் சொன்னார். நீங்கள் வைத்துவிட்டுப் போன காலியிடங்களைத்தான் நாங்கள் நிரப்பியிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், அதைக் கேட்பதற்கே உங்களுக்கு உரிமை கிடையாது.

முற்பகல் 11–10

அரசு மருத்துவமனைகள் இயங்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 1,471 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிற காரணத்தினாலே, அந்த மருத்துவமனைகளில் மருத்துவர்களை நியமனம் செய்து, செவிலியர்களை நியமனம் செய்து இப்போது 2 இலட்சத்து 50 ஆயிரம் பிரசவங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டைவிட, கடந்த ஆட்சியைவிட 2 மடங்கு, 3 மடங்கு என்ற வித்தியாசத்திலே அரசு மருத்துவமனைகளில் பிரசவங்கள் நடந்திருக்கின்றன. காரணம், போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் இருக்கிற காரணத்தினால்தான்.

அதேபோல, வேதாரண்யம் மருத்துவமனையில் இன்றைய தினம் நிலைமை என்னவென்றால், அங்கே 10 மருத்துவர் பணியிடங்கள் இருந்தாலும், தற்சமயம் 7 பேர் அந்தப் பணியிடங்களில் இருக்கிறார்கள். 7 மருத்துவர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது 3 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. Senior Civil Surgeon பணியிலிருந்து, promotion கொடுக்கும்போதுதான் ஒரு பணியிடத்தை நிரப்ப முடியும். பல் மருத்துவர் பணியிடத்திற்குத் தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலம்

2009 பிப்ரவரி 23] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

தேர்வு செய்யப்பட வேண்டும். அங்கே காலியாக உள்ள மற்றப் பணியிடங்களை நிரப்புவதற்குத் திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் தனியாகவே தேர்வு செய்யப்பட்டு, இன்றைய தினம் அங்கே கலந்தாய்வுக்கு அவர்களை அழைத்திருக்கிறோம். ஏனென்றால், தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இடங்களை நிரப்பிக் கொண்டிருக்கும்போது, திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் ஆகிய 2 மாவட்டங்களுக்கு மட்டும் மருத்துவர்கள் செல்ல மறுக்கின்றார்கள். கலந்தாய்வின்போதும் இதைச் சொல்கின்றார்கள். கலந்தாய்வுமூலமாகத்தான், அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்பதான் மருத்துவர்களை நாங்கள் நியமனம் செய்கின்றோம். கலந்தாய்வு செய்யும்போது நாங்கள் நாகை மாவட்டத்திற்குச் செல்ல மாட்டோம் என்று சொல்கிறார்கள். அதனால், நாகை மாவட்டத்திற்கும், திருவாரூர் மாவட்டத்திற்கும் என்று இன்றைய தினம் அங்கே கலந்தாய்வுக் கூட்டம் நடக்கிறது என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே பொதுமக்கள் யாரும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வேண்டுமென்றே, இந்த ஆட்சிக்குக் களங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் போராட்டத்தை நடத்துகிறார்கள். மக்கள் அங்கே பதற்றப்படவில்லை. 7 மருத்துவர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டால் அவர்கள் செல்வதில்லை என்று அவரே சொன்னார். கலந்தாய்வு இன்றைய தினம் நடைபெறுகிறது என்றும் சொன்னார். 10 மருத்துவர்கள் போட வேண்டும்; 7 மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொன்னார். ஆனால், ஒரே ஒரு மருத்துவர்தான் அங்கே வந்திருக்கிறார். அமைச்சர் அங்கே சென்று பார்க்க வேண்டுமென்று சொன்னால், பார்க்கலாம். இது அரசியலுக்காக அல்ல. ஒரு பகுதியில் உண்ணாவிரதம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக நடைபெறுகிறது என்று சொன்னால், அண்ணா தி.மு.க. தூண்டுதலால் அல்ல. வேதாரண்யத்திலே மருத்துவர் இல்லை. அங்கே பாதிக்கப்படுகின்ற மக்களே திரண்டு வந்திருக்கிறார்களே தவிர, அமைச்சர்

சொல்வதுபோல, அந்தக் குற்றச்சாட்டுகள் அல்ல. அமைச்சர் எப்போது பேசினாலும், அண்ணா தி.மு.க.-வைத் தாக்கிப் பேசுவது என்பது வேடிக்கையாக இருக்கிறது. நீங்கள் சரியான முறையில் மருத்துவர்களை நியமித்தால் அதை நாங்கள் கேட்கப்போவதில்லை. மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். அதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள். நீங்களே சொன்னீர்கள், வேதாரண்யம் மட்டுமல்ல; நாகப்பட்டினம் மற்றும் திருவாரூரிலே மருத்துவர்கள் செல்வதில்லை என்று நீங்களே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதை மட்டும் நான் வலியுறுத்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்த 2 மாவட்டத்திற்கும் மருத்துவர்கள் செல்வதில்லை என்பதை ஒத்துக்கொண்டார்கள். இருந்தாலுங்கூட இன்றைய தினம், கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி, யார் அந்த மாவட்டங்களுக்குச் செல்கிறார்களோ அவர்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இன்றைய கலந்தாய்வுக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு, யார் யார் அங்கே போக விரும்புகிறார்களோ அவர்களை அரசாங்கம் நியமிக்கும்.

4. திருப்பூர், புதிய மாவட்டம் உருவாகியமைக்கு நன்றியுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழ்நாட்டினுடைய 32 வது மாவட்டமாக திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாகியிருக்கிறது. அதற்காக அந்தத் தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைச் சொல்ல தங்களிடம் அனுமதி கேட்டேன். தாங்கள் அனுமதித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.